தாலாட்டும் கண்களில் நீரோட்டமோ! –அது
தாளாத உள்மனப் போராட்டமோ!

உள்ளத்தின் அன்பில் உதடசையும்,
உருக்கிய என்பில் உடல் வளரும்!
உணவின் வகைகள் சரிபார்த்து,
உண்டவை உண்டே உயிர்காத்து,

காலம் எழுதிய போதிமரம்,
காட்டாய் வெள்ளத்தைத் தந்துவிட,
வாடிய கைகள் நலிந்து விட,
வருகின்ற ஞானங்கள் பயன் தருமோ?

உயிரின் உணர்வின் வெளிப்பாடு,
உணராமல் தன்வழி போயிடவும்..
(தாலாட்டும்......)

18-12-1999